205

[Appr]oved by the Text-Book Committee, Madras.

The LAMP OF INDIAN HISTORY

BOOK I

51

11 JUL 19



S. BRAHMA

V2
N34
121211

இந்திய சரித்திர தீபம்

முதற் புத்தகம்

11 ...

C. V. நாராயண ஐயர், M. A., L. T.,

Assistant Professor of History, Presidency College, Madras.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 5

Approved by the Text-Book Committee

Vide Fort St. George Gazette, Page. 610

Dated 11th November, 1930.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
11 JUL 1934

PREFACE

The aim of this book 'இந்திய சரித்திர தீபம்' (The Lamp of Indian Histry) is to introduce young children to the salient facts of Indian History without making them at any stage feel that they are learning History. For that purpose, facts are presented in the form of stories with such details and additions as are needed to make them easily remembered. The stories themselves are such as are likely to make children unconsciously appreciate the high and noble qualities of the heroes. Every attempt has been made to narrate them in a simple, chaste and attractive style. At a later stage, when the children read about these same heroes as historical personages, their impressions will be vivid and correct. One who reads the book with care will not fail to perceive the fact that the author has endeavoured to lay stress upon the special moral excellence of the hero chosen. This has been purposely done, because young children have always a tendency to think in glowing terms of every hero of whom they read.

The mind dwells longer on things seen than on things heard. Hence, special care has been taken to introduce suitable illustrations, photos and reprints of famous paintings.

C. V. NARAYANA IYER

பொருள் அடக்கம்

			பக்கம்
1.	பரதகண்டம்	....	1
2.	தகப்பன் சொல் தவறாத வீரன்	....	2
3.	உயிர்களை நேசித்த உத்தமர்	....	5
4.	யவன வீரனும் இந்திய மன்னனும்	....	9
5.	யவன வீரனும் இந்திய ஞானியும்	....	11
6.	நீதி தவறாத அசோகன்	....	16
7.	சகோதரியோடு அரசாண்ட ஹர்ஷன்	....	19
8.	ஒரு மகா வீரன் கட்டின கோபுரம்	....	22
9.	அடிமை அரசர்கள் கட்டின கோபுரம்	....	27
10.	தைரியம் சிறந்ததோ? அழகு சிறந்ததோ?	....	31
11.	உயிர் கொடுத்து மகனைக் காத்த பாபர்	....	38
12.	மகா அக்பர்	....	41
13.	சிவாஜி	....	44
14.	டெல்ஹியை ஆண்ட பக்கிரி அரசன்	....	48

படங்களின் அட்டவணை

1. பரதன் 1
2. இராமன் சீதையோடும் இலக்ஷ்மணனோடும் அயோத்தி நகரத்து வீதி வழியாக நடந்து காட்டுக்குப் போதல் 2
3. உலகத்தைத் துறந்த புத்தர் 6
4. உலகத்தை ஜயித்த மகா வீரனாகிய அலெக்சாண்டர் 10
5. அசோகன் தன் சகோதரனாகிய மஹேந்திரனைச் சிறையில் சந்தித்தல் 19
6. ஸ்ரீ ஹர்ஷ தேவன் தன் சகோதரியாகிய இராஜ்யஸ்ரீயைக் கானகத்தில் சந்தித்தல் 22
7. இராஜராஜ சோழன் தஞ்சாவூர்க் கோயிலில் தன் வெற்றிகளைக் குறிக்கும் கல்வெட்டுகளைச் சோதித்தல் 26
8. ரஜியா அரசி இக்கோபுரத்தின்மேல் ஏறிச் சென்று தன் தந்தையைப் பற்றிய வாக்கியங்களைப் படித்து மகிழ்ந்தாள். இதுவே குத்பினார் கோபுரம் 30
9. அழகும் வீரமும் மிக்க பத்மினியை அலாவுதீன் கண்ணாடியிற் காணுதல் 34
10. பாபர், "என் மகன் பிழைக்கும்படி நான் என் அருமையான உயிரை உமக்குத் தருகிறேன்," என்று பிரார்த்தித்தான். 40
11. அக்பர் ஹெமூவைக் கொல்ல மறுத்தல் 43
12. சிவாஜி நெடுநாள் சிறைப்பட்டிருந்த தன் தந்தையைச் சிறை மீட்டல் 48

பரதன்.

இந்திய சரித்திர தீபம்

முதற் புத்தகம்

1. பரதகண்டம்

சிறுவர்களே! படத்தைப் பாருங்கள்: ஒரு பெரிய காட்டில் ஒரு சிறுவன் நிற்கிருன். அவன் ஒரு கையில் ஒரு சிங்கக் குட்டியைத் தூக்கிக் கொண்டு நிற்கிருன். இந்தப் படத்தில் இருக்கின்ற தாய்ச் சிங்கத்தைப் பாருங்கள்: அது மிகவும் கோபமாய் இருக்கிறது. அஃது அந்தச் சிறுவனைக் கடிக்கப் போகிறது. சிறுவன் என்ன செய்கிருன்? அவன் ஒரு கோலினுலே தாய்ச் சிங்கத்தை அடித்துத் துரத்துகிருன். அந்தப் பையனுடைய தைரியத்தைப் பார்த்தீர்களா?

சிங்கத்தைக் கண்டும் பயப்படாத அந்தச் சிறுவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவன் பெயர் பரதன். அவன் துஷ்யந்த மகா ராஜாவின் பிள்ளை. அவன் தாயின் பெயர் சகுந்தலை.

துஷ்யந்தனுக்குப் பிறகு பரதன் இராஜா வானான். பரதன் இராஜாவானவுடனே, நமது தேசத்தில் இருந்த எல்லா அரசர்களையும் ஜயித்தான். அவன் நமது தேசம் முழுமைக்கும் ஒரே அரசனாய் இருந்தான். அவன் ஆண்ட காலத்தில் நமது தேசம் மிகவும் சிறப்பாய் இருந்தது. ஜனங்கள் எல்லோரும் க்ஷேமமாய் இருந்தார்கள்.

மகா தைரியசாலியான பரதன் நமது தேசத்தை ஆண்டான். அதனாலே நமது தேசத்திற்குப் பரதகண்டம் என்று பெயர் வந்தது.

நமது பரதகண்டத்தில் அநேக அரசர்கள் இருந்தார்கள். நீங்கள் அவர்களுடைய கதைகளைக் கேட்க விரும்புகிறீர்களா? நான் அந்த அரசர்களுடைய கதைகளைச் சொல்லுகிறேன். அவை மிகவும் இன்பமாய் இருக்கும்.

---

2. தகப்பன் சொல் தவறாத வீரன்

பிள்ளைகளே! நீங்கள் இந்தப் படத்தைப் பாருங்கள்: இதில் இரண்டு இராஜ குமாரர்களும் ஓர் இராஜ குமாரியும் ஒரு வீதி வழியாகப் போகிறார்கள். முதலில் போகிற இராஜ குமாரன் பெயர் இராமன். அவனுக்குப் பக்கத்தில் வருகிற இராஜ குமாரியின் பெயர் சீதை. சீதையின்

இராமன் சீதையோடும் இலக்குமணனோடும் அயோத்தி நகரத்து வீதி வழியாக நடந்து காட்டுக்குப் போதல்.

பின் வருகிற இராஜ குமாரன் பெயர் இலக்கு மணன். இவர்கள் எங்கே போகிருர்கள்? நான் உங்களுக்கு இவர்களுடைய கதையைச் சொல்லு கிறேன் :

இராமனுடைய தகப்பனர் தசரதர் என்ப வர். அவர் அயோத்திமா நகரில் வெகுகாலம் ஆண்டு வந்தார். அவர் இராமனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று நினைத்தார். ஆனல் அஃது அவருடைய இரண்டாவது மனைவியாகிய கைகேயிக்கு இஷ்டமில்லை. அவள் தன் மகன் பரதனுக்கே பட்டம் கட்ட வேண்டும் என்றும், இராமன் பதினன்கு வருஷம் காட்டில் வசிக்க வேண்டும் என்றும் தசரதரிடம் சொன்னள். தச ரதர் அப்படியே செய்வதாக வாக்குக் கொடுத்து விட்டார்.

தசரதர் கைகேயிக்குச் சொன்ன வார்த்தை களை இராமன் கேள்விப்பட்டான்; உடனே தகப்பனருடைய இஷ்டப்படியே அயோத்தியை விட்டுக் காட்டுக்குப் போகத் தீர்மானித்தான். அவன் சீதையிடம் வந்து தன் தகப்பனர் தனக்கு இட்ட கட்டளையைச் சொன்னன்; பின்பு சீதையைப் பார்த்து, "என் அன்பான சீதையே, நான் பிரிகிறதற்காகத் துக்கப்படாதே. நான் பதினன்கு வருஷங்களையும் சீக்கிரத்தில் கழித்து

விட்டுத் திரும்பி வந்து விடுவேன். அதுவரை யில் நீ இங்கேயே சுகமா யிரு," என்று சொன்ஞன்.

அதற்குச் சீதை சம்மதிக்கவில்லை. அவள் இராமனைப் பார்த்து, "நாதா, நமக்கு விவாகம் ஆனபோது என் தகப்பனுர் உங்களிடம் என்ன சொன்ஞர்? 'இராமா, சீதை உன்னை ஒரு போதும் விட்டுப் பிரியமாட்டாள்,' என்று சொன்ஞர் அல்லவா? தாங்கள் தகப்பனுருடைய சொற்படி காட்டுக்குப் போகிறீர்கள்; நானும் என் தகப்பனுர் சொற்படி உங்களை விட்டுப் பிரியாமல் இருப்பேன். மேலும், ஒரு நல்ல மனைவி கணவனை விட்டுப் பிரிந்து இருக்க விரும்பு வாளா?" என்ருள்.

இராமன் அதைக் கேட்டு மிகவும் சந்தோஷம் அடைந்தான். அவன் சீதையையும் தன்னேடு அழைத்துச் செல்லத் தீர்மானித் தான். இராமனும் சீதையும் காட்டுக்குப் போகிருர்கள் என்பதைக் கேட்டவுடனே இலக்குமணன், "நானும் உங்களோடு வருவேன்," என்ருன். இலக்குமணன் இராமனுடைய இரண்டாவது தம்பி. அவன் சுமித்திரையின் பிள்ளை; இராம னிடத்தில் மிகவும் அன்பு உடையவன்.

மூன்று பேரும் ஒருநாள் காலையில் அயோத்தியா நகரத்தின் தெரு வழியாக நடந்து காட்டுக்குப் போனார்கள். அன்று இராமனுடைய தாயாகிய கௌசலை 'கோ!' என்று அழுதாள். ஊரில் உள்ள ஜனங்கள் எல்லோரும் அழுதார்கள். ஏனென்றால் இராமன் அவர்களுக்கு ஒரு தகப்பனைப்போல் இருந்தான். சீதை அவர்களுக்கு ஒரு தாயைப்போல் இருந்தாள். இலக்குமணன் அவர்களுக்கு ஒரு சகோதரனைப்போல் இருந்தான். நீங்கள் இராமயணத்தை வாசித்தால் அவர்கள் காட்டில் என்ன செய்தார்கள் என்று அறிந்துகொள்வீர்கள்.

---

3. உயிர்களை நேசித்த உத்தமர்

வட இந்தியாவில் மகதநாட்டில் கங்கையின் தென் பாகத்தில் இராஜக்கிருஹம் என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊருக்கு அருகில் கழுகுமலை என்று ஒரு மலை உண்டு. ஒருநாள் அந்த மலைப் பக்கத்தில் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் மகா அழகு உடையவர். அவருடைய முகத்தில் கருணையும் அன்பும் நிறைந்து இருந்தன. அவர் வெகு தூரத்தில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பெயர் கௌதம சித்தார்த்தர்.

அவர் சுத்தோதன இராஜனுடைய பிள்ளை. கௌதமர் கபிலவாஸ்து என்னும் நகரில் பிறந்தார். அவர் இன்பமான மாளிகையிலே வாழ்ந்து வந்தார். அவருக்கு மிகவும் அழகிய மனையாள் ஒருத்தி இருந்தாள். கௌதமருக்கு எல்லா வித மான இன்பங்களும் இருந்தும், அவர் தாம் மட்டும் சந்தோஷமாக இருக்க விரும்பவில்லை. அவர் உலகத்தில் உள்ள ஜனங்களும் மற்றப் பிராணிகளும் படுகிற துன்பத்தை எப்படியாவது நீக்கவேண்டும் என்று நினைத்தார். அதனால், அவர் தம்முடைய மனைவியையும் குழந்தையை யும் விட்டு நாட்டைத் துறந்து காட்டுக்குப்போய் ஒரு பெரிய மகரிஷியானார்.

அவர் காட்டில் இருந்த பொழுதுதான் ஒரு நாள் மலைப்பக்கத்தில் நின்று வெகுதூரத்தில் எதையோ பார்த்துக்கொண்டு இருந்தார்.

அப்பொழுது அந்த வழியாகச் சில இடை யர்கள் ஆயிரம் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந் தார்கள். கௌதமர் அந்த இடையர்களின் தலை வனைப் பார்த்து, "ஐயா, இந்த ஆடுகளை எங்கே ஓட்டிக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த இடையர் தலைவன், "நாங்கள் பிம்பிசாரனுடைய நகருக்குப் போகிறோம். அந்த அரசன் ஒரு பெரிய யாகம் செய்கிறான். அந்த

உலகத்தைத் துறந்த புத்தர். 6

யாகத்தில் இந்த ஆடுகளை வெட்டப் போகி ருர்கள்," என்ருன்.

அதைக் கேட்டவுடனே, கௌதமரின் கண் களில் இருந்து 'மட மட' என்று நீர் வடிய ஆரம் பித்தது. அவர் "ஐயோ! இத்தனை உயிர்களும் வீணுகச் சாகப்போகின்றனவே! இந்த ஆடுகளை நான் எப்படியாவது காப்பாற்றவேண்டும்," என்று நினைத்தார். பின்பு, அவர் அந்த இடையர்களைப் பார்த்து, "என் சகோதரர்களே, நானும் உங்க ளோடு வருகிறேன்," என்ருர்.

இடையர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். கௌதமர் இடையர்களோடு பிம்பிசாரனுடைய நகரத்திற்குப் போனுர். அவர் நகருக்குள் சென்ற உடனே, ஜனங்கள் எல்லோரும் ஒரு மகாத்துமா வருகிருர் என்று நினைத்தார்கள். அவர்கள் ஓடிப் போய் அரசனிடம், "ஒரு மகாத்துமா வந்திருக் கிருர்," என்று சொன்னுர்கள்.

பிம்பிசாரன் உடனே யாகசாலையிலிருந்து வெளியே வந்தான். அவன் பெரியவரைப் பார்த்து அவருடைய காலிலே விழுந்து நமஸ் கரித்தான்; பின்பு கௌதமரை யாகசாலைக்குள் அழைத்துக்கொண்டு போனுன். அங்கே ஓர் இடத்தில் ஓர் ஆடு கட்டப்பட்டு இருந்தது.

ஒரு பிராமணன் வேத மந்திரம் சொல்லிக் கொண்டே அந்த ஆட்டை வெட்டப்போனான்.

அப்போது கௌதமர் பிராமணன் கையைப் பிடித்து நிறுத்தி, அதை வெட்டாமல் தடை செய்தார். பின்பு அவர் அரசனைப் பார்த்து, "அரசனே, நீ ஏன் இந்த ஆடுகளை வீணாகக் கொல்லுகிறாய்? இவைகளுக்கு மறுபடியும் உயிர் கொடுக்க முடியுமா? முடியாதே. நாம் நம் உயிரை நேசிப்பது போலவே இந்த ஆடுகளும் தம் உயிரை நேசிக்கின்றன. உயிர்களிடத்தில் காட்டும் இரக்கமே மேலான யாகம். அதைக் காட்டிலும் சிறந்த புண்ணியம் வேறு இல்லை. ஆகையால், நீ வீணாக இந்த யாகம் செய்யவேண்டாம்," என்று சொன்னார். அவர் அப்படிப் பேசின போது அவருடைய கண்களில் நீர் ஆறாகப் பெருகிற்று.

கௌதமர் சொன்ன அன்பான வார்த்தைகளைக் கேட்ட பிம்பிசாரன் உடனே அந்த ஆட்டை அவிழ்த்து விட்டுவிட்டான். அவன் அந்த ஆயிரம் ஆடுகளையும் இடையர்களுக்கே கொடுத்துவிட்டான்.

கௌதமர் பின்பு பிம்பிசாரனுடைய நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய்விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் இவ்வுலகில் மகா புத்தராய்

விளங்கினர். அவர் இந்த உலகத்தில் மிகவும் அற்புதமான தர்மங்களை உபதேசித்தார். அவர் போதித்த மதத்திற்குப் **புத்த மதம்** என்று பெயர். நீங்கள் பெரியவர்களாகும் பொழுது அவருடைய சரித்திரத்தைப் படிக்க மறவாதீர்கள்.

---

4. யவன வீரனும் இந்திய மன்னனும்

நமது பரதகண்டத்திற்கு மேற்கில் வெகு தூரத்திற் கப்பால் ஒரு பூகண்ட மிருக்கின்றது. அதற்கு ஐரோப்பா என்று பெயர். ஐரோப்பாக் கண்டத்தின் தென்கிழக்கில் **கிரீஸ்** என்றொரு நாடு உண்டு. அந் நாட்டினரை நமது தேசத்தார் **யவனர்** என்று அழைத்து வந்தனர். யவனரது நாடாகிய கிரீஸில் **மாசிடோனியா** என்று ஓர் இராஜ்யம் இருந்தது. அந்த இராஜ்யத்தைப் **பிலிப்** என்னும் மன்னன் ஆண்டு வந்தான். பிலிப் மகா தைரியசாலி. அவன் தன் நாட்டைச் சூழ்ந்துள்ள அநேக நாடுகளை ஜயித்துத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான்.

பிலிப் மன்னனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் **அலெக்சாண்டர்**. அவன் மகா வீரன்; மிக்க வலிமை உடையவன். பிலிப்

மன்னன் இறந்ததும் அலெக்சாண்டர் மாசிடோனியாவிற்கு அரசனானான். அவன் சிங்காசனம் ஏறியதும் ஒரு பெரிய யவனப் படையோடு உலகம் முழுவதையும் ஜயிக்கப் புறப்பட்டான். அவன் அநேக அரசர்களோடு போர் செய்து அவர்களை எல்லாம் வென்றான். அவன் அவர்களுடைய நாடுகளையெல்லாம் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான்.

முடிவில் அலெக்சாண்டர் நமது தேசத்தையும் கைப்பற்ற வேண்டும் என்று விரும்பினான். அவன் தன் பெரும் படையோடு நமது தேசத்திற்குள் புகுந்தான். அலெக்சாண்டருடைய வருகையைக் கேட்டவுடனே நமது தேசத்து மன்னர்கள் அவனை எதிர்க்க ஆயத்தமாய் இருந்தார்கள்.

அக்காலத்தில் நமது தேசத்தின் வடமேற்கில் உள்ள பாகத்தைப் பூரு என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் மகா தைரியசாலி. அவன் அலெக்சாண்டரை எதிர்த்து மிக்க வீரத்தோடு போராடினான். என்றாலும், மகா வீரனாகிய அலெக்சாண்டர் அவனை வென்றுவிட்டான். யவன வீரர்கள், போரில் தோற்றுப்போன பூரு மன்னனை அலெக்சாண்டரிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அலெக்சாண்டர் அந்த

உலகத்தை ஜயித்த மகா வீரனாகிய அலெக்ஸாண்டர். 10

மன்னனைப் பார்த்து, "இப்பொழுது, நான் உன்னை எவ்வாறு நடத்தவேண்டும்? சொல்," என்று கேட்டான்.

அற்கு அஞ்சா நெஞ்சனாகிய பூரு மன்னன், "நீ, ஓர் அரசனை நடத்துவதுபோல் என்னை நடத்தவேண்டும்," என்றான். அப்பொழுது அலெக்சாண்டர், "உனக்கு வேறொன்றும் தேவை இல்லையா?" என்று கேட்டான். அதற்குப் பூரு மன்னன், "ஓர் அரசனைப்போல என்னை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டதிலேயே நான் கேட்க வேண்டியவை யாவும் அடங்கிவிட்டன," என்றான். அலெக்சாண்டர் பூரு மன்னனுடைய தைரியத்தைக் கண்டு மிகவும் சந்தோஷித்தான். அவன் பூருமன்னனுடைய நாட்டை அவனுக்கே கொடுத்துவிட்டான்; அதனோடு, தான் கைப்பற்றின வேறு சில நாடுகளை ஆளும் உரிமையையும் அவனுக்குக் கொடுத்தான்.

---

5. யவன வீரனும் இந்திய ஞானியும்

பூரு மன்னனை வென்ற பின்பு, அலெக்சாண்டர் தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிப் போகத் தீர்மானித்தான். போவதற்கு முன் அவன் இந்தியாவில் உள்ள பெரிய ஞானிகளைக்

குறித்துக் கேள்விப்பட்டான். யவனர்கள் தங்கள் நாட்டிலுள்ள ஞானிகளிடத்தில் விசேஷமான மதிப்பும் மரியாதையும் உடையவர்கள். ஆகையால், அலெக்சாண்டர் தன் வீரர்களை அனுப்பி மிகவும் புகழ்பெற்ற ஒரு ஞானியை அழைத்துக் கொண்டுவரும்படி கட்டளை யிட்டான். யவனர்கள், தாம் அழைத்து வந்த ஞானிக்குக் கலாநாஸ் என்று பெயர் வழங்கினர். ஆனால், அந்த ஞானியின் பெயர் அஃது அன்று. அந்த ஞானி அலெக்சாண்டரைக் கண்டபொழுது உபயோகித்த ஏதோ ஓர் உபசார வார்த்தையின் திரிபே கலாநாஸ் என்பது. அதுவே பின்பு அவருக்குப் பெயராய்விட்டது.

யவன வீரர்கள் அவரை அழைக்கச் சென்றபோது அவர் ஒரு பாறையின்மேல் படுத்துக்கொண் டிருந்தார். அவர் யவனர்களுடைய தலைச்சீராவையும், அங்கியையும், நீண்ட பாதரட்சைகளையும் கண்டு உடல் குலுங்கச் சிரித்தார். யவன வீரர்களின் தலைவன் அவரை அலெக்சாண்டரிடம் வரும்படி அழைத்தான். அப்பொழுது அந்த ஞானி, "உங்கள் அரசன் தன் உடைகளை யெல்லாம் களைந்துவிட்டு இந்தக் கற்பாறையில் என்னைப் போலப் படுத்திருக்க முடியுமானல், நான் அவனுக்கு ஞான விஷயங்

ளைப் போதிக்க முடியும்,'' என்று சொன்னார். அதைக் கேட்டுக்கொண் டிருந்த மண்டேனஸ் என்ற வேறொரு ஞானி கலாநாஸைக் கடிந்து, "என் நண்பனே, நீ அலெக்சாண்டரை அறிய மாட்டாய். அவன் உலகமெங்கும் புகழ் பெற்ற அரசனாய் இருந்தும் எப்பொழுதும் ஞானத் தையே விரும்புகிறான். அவனைப் போர்க் கோலம் அணிந்த ஞானி என்றே சொல்ல வேண்டும்,'' என்றார். கலாநாஸ் முதலில் அலெக் சாண்டரிடம் போக மறுத்துவிட்டார். என்றா லும் முடிவில் யவன வீரர்களுடைய வேண்டு கோளினால், அவர் அலெக்சாண்டரிடம் சென்றார். அவர் அலெக்சாண்டரோடு சிறிது காலம் இருந் தார். அலெக்சாண்டரும் அவரும் வெகு சீக்கிரம் உற்ற நண்பர்களாய்விட்டனர்.

கலாநாஸ் அலெக்சாண்டரிடம் சென்ற பொழுது வயது சென்ற கிழவராய் இருந்தார். என்றாலும் அவர் சுகமும் திடமும் பொருந்திய சரீரம் உடையவராய் இருந்தார். அலெக்சாண்டர் அவரோடு இந்தியாவை விட்டுப் புறப்பட்டுத் தனது நாட்டை நோக்கிப் பிரயாணமானான். அலெக்சாண்டர் தன் வீரர்களோடு கரை மார்க்க மாகப் பிரயாணம் செய்து, பலுசிஸ்தானத்தின் தென்பாகத்திலுள்ள ஒரு பெரிய பாலைவனத்தை அடைந்தான். அங்கே வந்ததும் அவனுடைய

வீரர்களும் அவனும் தண்ணீர் காணமல் தாகத்தினல் பெரிதும் வருந்தினர்கள். சில வீரர்கள் தங்கள் அரசன் தாகத்தினல் வருந்துவதைக் கண்டு, உடனே, எங்கேயோ சென்று ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் கொண்டுவந்து அலெக்சாண்டரிடம் கொடுத்தார்கள். அலெக்சாண்டர் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தவர்களுக்கு நன்றி பாராட்டினன். பின்பு அந்தத் தண்ணீரைத் தன் வீரர்களெல்லோரும் காணப் பாலை வனத்து மணலிலேயே ஊற்றிவிட்டான். அதைக் கண்ட வீரர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள் ; தங்கள் அரசன் தங்களோடு எல்லா விதமான கஷ்டங்களையும் சகிப்பதற்கு ஆயத்தமாய் இருக்கிருன் என்பதைக் கண்டார்கள். அவர்கள் மிகவும் தைரியத்தோடும் பொறுமையோடும் அவனேடு அந்தப் பாலை வனத்தைக் கடந்து போனர்கள்.

அலெக்சாண்டர் சில நாளில் தன் வீரர்களோடும் கலாநாஸோடும் பேர்ஸி போலிஸ் என்னும் நகரை அடைந்தான். அப்பொழுது கலாநாஸ் வியாதியாய்ப் படுத்தார். அச்சமயம் அவர் விறகுகளை அடுக்கித் தமக்கு ஒரு சிதை ஆயத்தம் பண்ணும்படி அலெக்சாண்டரிடம் சொன்னர். சிதை ஆயத்தமான உடனே கலாநாஸ் அதன் மேல் ஏறிப் படுத்துக்கொண்டு அதற்குத் தீ

மூட்டக் கேட்டுக்கொண்டார். அலெக்சாண்டர் முதலில் அதற்கு இணங்கவில்லை. கலாநாஸ் தம் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்; ஆனால் அலெக்சாண்டரிடம் மட்டும் விடைபெற்றுக் கொள்ளவில்லை. அவனைத் தாம் பாபிலோன் நகரில் சந்திப்பதாக வாக்களித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் சிதை எரியத் தொடங்கிற்று. தீ அவரை எரிக்கத் தொடங்கியபோதிலும், அந்த ஞானி அசையாமலும் வாய் திறவாமலும் இருந்தார். முடிவில் அவர் இவ்வுலகை விட்டு அகன்றார். அலெக்சாண்டர் பின்பு பாபிலோன் நகர் சென்றான். அங்கே சென்றதும் அவனும் இறந்துபோனான்.

கலாநாஸ் சொன்ன அநேக நன் மொழிகளை யவனர்கள் எழுதி வைத்திருக்கின்றனர். அம் மொழிகளில் ஒன்றை நீங்களும் அறிய விரும்புகிறீர்கள் அல்லவா? அதனால் அவைகளில் ஒன்றை இங்கே சொல்லுகின்றேன்: ஒரு நாள் சில மனிதர்கள் ஒரு மைதானத்தில் அங்கும் இங்கும் நடந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் நடக்கும்பொழுதே தம் கால்களால் நிலத்தை உதைத்துக்கொண் டிருந்தார்கள். அதைக் கண்ட அலெக்சாண்டர் கலாநாஸிடம் அதன் கருத்து என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி, “அரசனே, இவ்வுலகில் உள்ள ஒவ்

வொரு மனிதனுக்கும் அவனுடைய ஒரு காலடி அளவு நிலம் சொந்தமானது. நீயும் மற்றவர்களைப்போன்ற ஒரு சாதாரண மனிதனேயாம். என்றாலும், நீ சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்க உன் நாட்டை விட்டு இவ்வளவு தூரம் வந்தாய். ஆனாலும், நீயும் வெகு சீக்கிரம் இறந்துபோவாய். அப்பொழுது நீ உனக்குச் சொந்தமாக உன் எலும்புகளைப் புதைக்கப் போதுமான ஓர் அடி நிலத்தைத்தான் அடையப் போகிறாய் என்பதை அந்த மனிதர்கள் உனக்குக் கற்பிக்கின்றார்கள்,'' என்றார். அலெக்சாண்டர் அதைக் கேட்டு வெட்கமடைந்தான்.

---

6. நீதி தவறாத அசோகன்

வெகு காலத்திற்கு முன் வட இந்தியாவில் மகத நாட்டின் தலை நகராயிருந்த **பாடலிபுரத்தில்** ஓர் அரசன் இருந்தான். அவன் பெயர் **அசோகன்.** அவன் புத்தருடைய உபதேசங்களின்படி நடந்தான். அவன் நமது தேசம் எங்கும் புத்த தர்மத்தைப் பரவச் செய்தான்.

நமது தேசத்தை ஆண்ட அரசர்களில் அசோகன் மிகவும் புகழ் பெற்றவன். அவனைக்

குறித்து அநேக கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒரு கதை, அவன் எப்படி நீதி தவறாமல் ஆண்டான் என்பதைக் காட்டுகிறது.

அசோகனுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் பெயர் மஹேந்திரன். அவன் வீணான காரியங்களில் பணத்தைச் செலவிட்டான்; மிகவும் பகட்டான உடைகள் தரித்தான்; அரசர்களைக் காட்டிலும் வெகு சிறப்பாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டான். அவன் பல கெட்ட காரியங்கள் செய்து வந்தான்.

அவன் செய்த காரியங்களைக் கண்ட ஜனங்கள் மிகவும் கோபம் அடைந்தார்கள். அவர்கள் அவன் செய்த காரியங்களை எல்லாம் அசோகனிடம் சொன்னார்கள். அவைகளைக் கேட்டவுடனே, அசோகனுக்குக் கோபம் வந்தது. அசோகன் உடனே சில வீரர்களை அனுப்பி மஹேந்திரனை அழைத்துவரச் சொன்னான்.

மஹேந்திரன் வந்த உடனே, அசோகன் அவனைப் பார்த்து, "என் சகோதரனே, குடிகள் தவறு செய்தால் அரசன் தண்டிக்க வேண்டும். அரசன் தவறு செய்தால் அவனை யார் தண்டிப்பது? அரசன் தவறு செய்தால் குடிகள் கோபம் அடைவார்கள். நீயோ என் சகோதரன்; ஜனங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்க

வேண்டியவன். அப்படியிருக்க, நீ ஒரு சிறு குற்றம் செய்தாலும் பெரிய தண்டனை அடைய வேண்டும். ஆனால், நீயோ பெரிய குற்றங்கள் செய்திருக்கிறாய். ஆகையால், நான் உன்னைத் திட்டமாகத் தண்டிக்க வேண்டும்," என்றான்.

அதைக் கேட்ட மஹேந்திரன் ஒன்றுமே பேசாமல் இருந்தான். அப்போது அசோகன் தன் சகோதரன் என்பதையும் பாராமல் சமீபத்தில் நின்ற சில வீரர்களை நோக்கி, "நீங்கள் இவனை மிகவும் இருண்ட ஒரு சிறைச்சாலையிலே தள்ளிப் பூட்டுங்கள்; ஏழாவது நாளில் இவனைத் தூக்கிலிடுவோம்," என்றான். உடனே வீரர்கள் மஹேந்திரனுக்கு விலங்கிட்டார்கள்; அவனைக் கொண்டுபோய் ஓர் அறையில் தள்ளிப் பூட்டிவிட்டார்கள்.

மஹேந்திரன் அந்த அறையில் இருந்த போது, தான் செய்த தப்பான காரியங்களைக் குறித்து நினைத்தான்; அவைகளை நினைத்து மிகவும் துக்கித்தான்; பின்பு, தான் நல்லவனாய் இருக்க என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்தான். அவன் புத்தரைத் தியானித்தான். அவரைப் போலவே தானும் ஒரு மகாத்மா ஆக வேண்டும் என்று பெரிதும் ஆவல் கொண்டான். அவன் சிறைச்சாலையில் இருந்த ஏழு நாட்களுக்

குள் மகா ஞானியாய் விட்டான். அவனைச் சூழ்ந்து ஒரு விதமான தெய்வ ஒளி வீசிற்று.

ஏழாம் நாள் அசோகன் வந்து மஹேந்திரனைப் பார்த்தான். அப்போது மஹேந்திரன் ஒரு பெரிய ஞானியாகக் காணப்பட்டான். ஆகையால், அசோகன் அவனை மன்னித்தான். அன்று முதல் மஹேந்திரன் ஒரு பௌத்த சன்னியாசி ஆனான். அவன் இலங்கைத் தீவுக்குப் போய் அங்குள்ள ஜனங்களுக்குப் புத்த மதத்தைப் போதித்தான். நீங்கள் இன்று இலங்கைக்குப் போனால், அங்குள்ள ஜனங்கள் உங்களுக்கு மஹேந்திரனைக் குறித்துப் பல கதைகள் சொல்லுவார்கள்.

---

7. சகோதரியோடு அரசாண்ட ஹர்ஷன்

வட இந்தியாவில் தனேசுவரம் என்று ஒரு நகரம் உண்டு. அந்த நகரை இராஜ்யவர்த்தனன் என்னும் அரசன் ஆண்டுவந்தான்.

ஒரு நாள் ஒரு குதிரை வீரன் வெகு வேகமாய் ஓடிவந்தான். அவன் அரசன் முன் சென்று வணங்கி, “ இராஜாதி ராஜரே, மாளவ தேசத்து மன்னன் தங்களுடைய சகோதரியாகிய இராஜ்ய ஸ்ரீயை விலங்கிட்டுச் சிறையில் அடைத்துவிட்டான்; இராஜகுமாரியின் கண

வரான கிருஹவர்மனைக் கொன்றுவிட்டு அவருடைய நாடாகிய கன்னோசியையும் கைப்பற்றிக் கொண்டான்,'' என்று சொன்னான்.

அதைக் கேட்டவுடனே, இராஜ்யவர்த்தனன் பெருஞ் சேனையோடு மாளவ மன்னனைத் தண்டிக்கச் சென்றான். அவன் மாளவ மன்னனோடு யுத்தம் செய்தான். போரில் மாளவ மன்னன் இறந்தான். இராஜ்யவர்த்தனன் ஜயம் பெற்றுத் தனேசுவரத்திற்குத் திரும்பிவரப் புறப்பட்ட போது ஒருவன் வஞ்சனையாக அவனைக் கொன்று விட்டான்.

இந்தத் துக்கமான செய்தி இராஜ்யவர்த்தனனுடைய தம்பியாகிய ஹர்ஷவர்த்தனனுக்கு எட்டியது. அதைக் கேட்டவுடனே ஹர்ஷன் மிகவும் துக்கம் அடைந்தான்; சகோதரியைக் குறித்து மிகவும் கவலைப்பட்டான். இராஜ்யவர்த்தனன் இறந்ததைக் கேட்டதும், தனேசுவரத்தின் ஜனங்கள் ஹர்ஷனைத் தங்களுடைய நாட்டிற்கு இராஜாவாக ஏற்படுத்திக்கொண்டார்கள்.

ஹர்ஷன் இராஜாவான உடனே, எப்படியாவது தன் சகோதரியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று புறப்பட்டான். அவன் ஒரு பெரும் படையோடு மாளவம் சென்று அவளைத்

அசோகன் தன் சகோதரனாகிய மஹேந்திரனைச்
சிறையில் சந்தித்தல்.

தேடினான். ஆனால், அவள் அங்கிருந்து எங்கேயோ ஓடிப்போய்விட்டாள். ஹர்ஷனுக்கு அவள் எங்கே போனாள் என்ற செய்தி கிடைக்கவில்லை; ஆயினும், அவன் அவளை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்; முடிவில் தன் சேனையோடு ஓரிடத்தில் தங்கினான்; சில உண்மையான வீரர்களை மட்டும் தன்னுடன் கூட்டிக்கொண்டு இராஜ்ய ஸ்ரீயைத் தேடிச் சென்றான்.

ஹர்ஷன் எங்கே போக வேண்டும் என்பது தெரியாமல் தன் கால் போனபடியெல்லாம் நெடு நாட்கள் பிரயாணம் செய்தான். முடிவில், அவன் ஒரு பெரிய மலைநாட்டுக்கு வந்தான். அது விந்தியமலைப் பிரதேசம். விந்திய மலை நமது பரதகண்டத்தின் மத்தியில் இருக்கிறது. அதைச் சுற்றிப் பயங்கரமான காடுகள் உண்டு. அந்தக் காடுகளில் சிங்கங்களும் புலிகளும் வேறு பல பொல்லாத மிருகங்களும் எப்போதும் திரிந்து கொண்டு இருக்கும்.

ஹர்ஷன் அநேக நாட்கள் வரையில் அந்தக் காட்டில் அங்கும் இங்கும் திரிந்தான்; முடிவில் சில மலைவாணர்களைச் சந்தித்தான். அவன் அவர்களின் உதவியினால் வெகுதூரம் இரவில் அலைந்து முடிவில் ஓர் இடத்திற்கு வந்தான்.

அங்கே ஒரு பெரிய தீ எரிந்துகொண்டு இருந்தது. அதன் எதிரில் மிகவும் அழகான பெண் ஒருத்தி நின்றுகொண்டு இருந்தாள். அவள் கையில் அவளுடைய கணவனின் பாதரக்ஷைகள் இருந்தன. அச்சமயம், அவள் நெருப்பில் குதிக்க ஆயத்தமாய் இருந்தாள்.

ஹர்ஷன் அவளைக் கண்டவுடனே, "என் தங்காய்! தங்காய்!" என்று கூவிக்கொண்டே ஓடிப்போய் அவளைக் கட்டிக்கொண்டான். அப்போது, அவ்விருவருக்கும் உண்டான சந்தோஷத்தைச் சொல்லவே முடியாது. சில நாட்களுக்குள் அவ்விருவரும், தனேசுவரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது ஜனங்கள் எல்லோரும் சந்தோஷத்தினாலே கூத்தாடினார்கள். ஹர்ஷன் தன் சகோதரியோடு நாட்டை வெகுகாலம் நன்றாய் ஆண்டு வந்தான்.

---

8. ஒரு மகா வீரன் கட்டின கோபுரம்

நான் உங்களுக்கு ஒரு கோபுரத்தின் கதையைச் சொல்லப்போகிறேன்: அந்தக் கோபுரந்தான் இந்தியாவில் முதன்முதல் இருந்த பெரிய கோபுரம். நான் சொல்லப்போகிற கோபுரம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? அது தஞ்சாவூர்க் கோபுரமேயாம்.

ஸ்ரீ ஹர்ஷதேவன் தன் சகோதரியாகிய இராஜ்யஸ்ரீயைக் கானகத்தில் சந்தித்தல்.

நீங்கள் தஞ்சாவூர் ஜில்லா முழுவதும் பிரயாணம் செய்தால் அங்கே மூவாயிரம் கோயில்களைப் பார்ப்பீர்கள். அந்தக் கோயில்கள் பலவற்றிலும் பெரிய கோபுரங்கள் இருக்கின்றன. ஆனால் நான் சொல்லுகிற கோபுரத்தைப் பார்க்கவேண்டுமானால், நீங்கள் தஞ்சாவூர் ஜில்லாவின் தலை நகருக்குப் போகவேண்டும். அந்த ஜில்லாவிற்குத் தலை நகரம் தஞ்சாவூரேயாம்.

தஞ்சாவூரில் ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் உள்ள விக்ரஹம் மிகப் பெரியது. அதனாலே அங்குள்ள சுவாமிக்குப் பிருகதீசுவரர் என்று பெயர். அந்தக் கோயிலில் இருக்கிற கோபுரம் மிகப் பெரியது.

நீங்கள் மற்றக் கோயில்களிலுள்ள கோபுரங்களைக் கவனித்துப் பாருங்கள் : அவை சுவாமிக்கு முன்பாக வாசலின்மேல் கட்டப்பட்டிருக்கும். ஆனால் தஞ்சாவூரில் உள்ள கோபுரமோ சுவாமி இருக்கிற இடத்திற்கு மேலே ஒரு விமானம் போல அமைந்து இருக்கிறது. அது மூலஸ்தானத்திலிருந்து 96 அடி கொண்ட நாற்சதுரமான அடித்தளத்தின் மேல் நிற்கிறது. அந்தக் கோபுரத்தின் உயரம் 208 அடி. அந்தக் கோபுரத்தின் உச்சியில் வட்ட விமானம் ஒன்று இருக்கிறது. அதன் நிறை 80 டன். அம்மா!

அவ்வளவு பாரமான கல்லை அவ்வளவு உயரத்தில் எப்படித் தூக்கிவைத்தார்கள்? என்ன ஆச்சரியம்!

இது மட்டுமா? அந்தக் கோபுரத்திற்கு எதிரே ஒரு பெரிய எருது படுத்து இருக்கிறது. அஃது ஒரே கல்லினுல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் உயரம் முன் பக்கத்தின் பீடத்திலிருந்து தலை மட்டும் 12 அடி. நீங்கள் அந்தக் கோயிலில் எங்கும் அற்புதமான காட்சிகளையே பார்ப்பீர்கள்.

நீங்கள் அந்தக் கோயிலைப் பார்க்கும் பொழுது, 'இவ்வளவு பெரிய கோயிலைக் கட்டினவன் யாவன்?' என்று கேட்பீர்கள். அந்தக் கோயிலைக் கட்டினவன் இராஜராஜ **சோழன்.** இராஜராஜ சோழனுடைய தகப்பன் பராந்தக **சோழன்.** இராஜராஜ சோழனுக்கு ஒரு தமையனும், ஒரு தமக்கையும் இருந்தார்கள். தமையன் பாண்டிய ராஜனோடு போர்செய்து யுத்தத்தில் மடிந்தான். பின்பு இராஜ ராஜன் அரசனுனன். அவன் தன் சகோதரியாகிய குந்தவை என்பவளை மிகவும் அன்பாக நேசித்து வந்தான்.

இராஜராஜனுடைய காலத்தில் சாளுக்கியர் என்ற அரசர்கள் மிகவும் பலசாலிகளாய் இருந்தார்கள். அவர்கள் சோழநாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டே வந்தார்கள். இராஜராஜன் சாளுக்கியரை அடக்க வேண்டுமென்று நினைத்

தான்; ஒரு பெரும் படையோடு போருக்குச் சென்று அவர்களை வென்றான்.

பின்பு அவன் பாண்டிய நாட்டையும் சேர நாட்டையும் எதிர்த்து, அவற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான். அவன் கலிங்க நாட்டு அரசனையும் யுத்தத்தில் வென்றான். இராஜராஜனிடம் ஒரு பெரிய கப்பற் படை இருந்தது. அவன் அந்தக் கப்பற்படையோடு கடலைக் கடந்து இலங்கை அரசனையும் வென்றான். இப்படியே நாளடைவில் அவன் தமிழ் நாடுகளுக்கெல்லாம் சக்கரவர்த்தி ஆனான்.

இராஜராஜன் மகா வீரனாய் இருந்ததோடு குடிகளிடத்திலும் மிக்க அன்பு உடையவனாய் இருந்தான். அவன் குடிகளைத் தன் பிள்ளைகள் போல நினைத்துக் காத்துவந்தான். அவன் அநேக தான தருமங்கள் செய்தான். அவனுடைய காலத்தில் தமிழகம் மிகவும் க்ஷேமம் அடைந்திருந்தது.

இராஜராஜன் கட்டின கோயிலில் ஒரு பக்கத்திலுள்ள கற்களில், அவன் அடைந்த வெற்றிகள் எல்லாம் சித்திரமாகச் செதுக்கப் பட்டு இருக்கின்றன. அந்தக் கோயிலில் எண்ணிறந்த கல்வெட்டுச் சாசனங்கள் இருக்கின்றன. அந்தக் கல்வெட்டுச் சாசனங்களினால் அவன்

இராஜராஜ சோழன் தஞ்சாவூர்க் கோயிலில் தன் வெற்றிகளைக் குறிக்கும் கல்வெட்டுகளைச் சோதித்தல்.

செய்த காரியங்களும் தான தருமங்களும் தெரிய வரும். இராஜராஜனால் தமிழ்நாடு பெரும் புகழ் அடைந்தது. தஞ்சாவூர்க் கோயிலையும் அதன் கோபுரத்தையும் பார்த்தால் அக்காலத் தில் நமது தமிழ்நாடு அடைந்திருந்த சிறப்புத் தெரியவரும்.

---

9. அடிமை அரசர்கள் கட்டின கோபுரம்

சிறுவர்களே! நமது பரத கண்டத்தில் தஞ்சாவூர்க் கோபுரத்தைப் பார்க்கிலும் எது மிகப் பெரியது என்று உங்களுக்குத் தெரியுமா? அது குத்ப்மினர் கோபுரமேயாம். அந்தக் கோபுரம் வட இந்தியாவில் டெல்ஹி நகருக்கு வடக்கே பத்து மைல் தூரத்தில் இருக்கிறது. நான் உங்களுக்கு அந்தக் கோபுரத்தின் கதை யைச் சொல்லப்போகிறேன் :

இந்தியாவிற்கு வடமேற்கில் ஆப்கானிஸ் தானம் என்று ஒரு தேசம் உண்டு. அதற்குத் தலை நகரம் கஜினி. அங்கே மாமூது என்று ஓர் அரசன் இருந்தான். அவனை எல்லோரும் கஜினி மாமூது என்று அழைத்து வந்தார்கள். அவன் பொல்லாத போர்வீரன். அவன் பரத கண்டத்தின் வட பாகத்தில் பலமுறை படை

யெடுத்து வந்தான். நம்முடைய நாட்டில் இருந்த ஜனங்கள் சேர்த்து வைத்திருந்த செல்வத்தை எல்லாம் அவன் கொள்ளையடித்துக் கொண்டுபோனான். அவன் அந்தச் செல்வத்தினால் கஜினி நகரை அழகு செய்தான். எனினும் அவன் முடிவில் இறந்தான்.

அதன் பின்பு வேறொருவன் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தான். அவன் ஆப்கானிஸ்தானத்தில் உள்ள **கோர்** என்ற நகரைச் சேர்ந்தவன். அதனாலே அவனை எல்லோரும் **கோரி** முகம்மது என்று அழைத்தனர். அவன் வட இந்தியாவில் ஆண்ட அரசர்களுடைய செல்வத்தையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டுபோனான். அதனோடு அவன் பஞ்சாபையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான்.

முகம்மது கோரி, இந்தியாவை விட்டுப் போனபோது ஒரு வீரனைப் பஞ்சாப் தேசத்திற்குத் தலைவனாக்கினான். அந்த வீரன் பெயர் குத்புதீன். அவன் கோரியின் அடிமைகளில் ஒருவன். கோரி இறந்ததும் குத்புதீன் டெல்ஹிக்குத் தலைவனானான்.

குத்புதீனே வட இந்தியாவில் டெல்ஹி நகரத்தில் முதன்முதலில் முகம்மதிய அரசாட்சி

யை ஏற்படுத்தினவன். பின்பு, அவன் கோரியின் ஞாபகத்திற்காக ஒரு பெரிய கோபுரம் கட்ட வேண்டுமென்று தீர்மானித்தான்; விரைவில் அதற்குத் தேவையான கற்களைச் சேகரித்து ஒரு பெரிய கோபுரம் கட்ட ஆரம்பித்தான்.

அக் கோபுரத்தைக் கட்டப் பல இந்துக்களும் முகம்மதியர்களும் கூலி ஆட்களாய் வந்தார்கள். நமது தேசத்தில் இருந்த கொற்றர்களும் சிற்பிகளும் அதைக் கட்டத் தொடங்கினார்கள். நாளுக்கு நாள் கோபுரம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்துகொண்டே வந்தது. ஆனால் அந்தக் கோபுரத்தின் முதல் தட்டு முடிகிறதற்குள்ளே குத்புதீன் இறந்து போனான்.

குத்புதீன் ஓர் அடிமையை அன்பாக நேசித்து வளர்த்து வந்தான். அந்த அடிமையின் பெயர் ஆல்தாமிஷ். ஆல்தாமிஷ் குத்புதீனுக்குப் பிறகு டெல்ஹியில் அரசனானான். ஆல்தாமிஷ் தன் எஜமானனாகிய குத்புதீன் தொடங்கின வேலையை முடிக்கத் தீர்மானித்தான். கோபுரம் ஒரு தட்டிலிருந்து மறு தட்டிற்கு உயர்ந்தது.

ஆல்தாமிஷ் ஒவ்வொரு நாளும் கோபுர வேலையை மேற்பார்வையிட்டு வந்தான். ஆல்தாமிஷுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள்

அவர்களில் ரஜியா என்பவள் மிகவும் அழகு உடையவள் ; நல்ல அறிவுடையவள். ஆல் தாமிஷ் அவளை மிகவும் நேசித்தான்.

ரஜியா தன் தகப்பனோடு தினந்தோறும் அந்தக் கோபுரத்திற்குப் போவாள்; அங்கே, சுழன்று சுழன்று மேல் நோக்கிச் செல்லும் படிக்கட்டுக்களில் ஏறிக் கோபுரத்தின் மேல் போய் நிற்பதுண்டு. அவள் அங்கிருந்து பார்த்த பொழுது ஆகாயத்தில் நிற்பதாக நினைத்தாள்.

ரஜியா பெரியவளான பொழுது இந்தியாவில் உள்ள கோபுரங்களில் எல்லாம் பெரிதான அந்தக் கோபுரம் முடிவு அடைந்தது. அதன் அடிப்பாகம் 47 அடி குறுக்களவு உடையது ; அதன் உச்சி 9 அடி குறுக்களவு உடையது ; அதன் உயரம் 233 அடி.

அதில் ஐந்து தட்டுகள் இருக்கின்றன. உச்சிக்கு இலேசாய் ஏறிப்போகும் படிக்கட்டுகள் அமைந்திருக்கின்றன. போகிற வழியில் சுவர்களில் அழகான சித்திர வேலைகளைப் பார்க்கலாம். அதன் உச்சியில், வெகுதூரம் ஒலியைப் பரப்பும் பெரிய மணி ஒன்று தொங்குகிறது.

ஆல்தாமிஷ் இறந்த பிறகு ரஜியா டெல்ஹியை ஆளத் தொடங்கினாள். அவள் பல



இராஜியா அரசி இக்கோபுரத்தின்மேல் ஏறிச்சென்று தன் தந்தையைப்பற்றிய வாக்கியங்களைப் படித்து மகிழ்ந்தாள். இதுவே குத்தப்மினர் கோபுரம்.

சமயங்களிலும் அந்தக் கோபுரத்திற்குப் போவது வழக்கம். அவள் அக்கோபுரத்தில் ஏறிப்போகிற போதெல்லாம் உட்சுவரில் தன் தகப்பனுரைக் குறித்து எழுதி இருக்கிற அருமையான வாக்கியங்களை வாசித்துச் சந்தோஷம் அடைவாள். நீங்களும் டெல்ஹிக்குப் போய் அந்தக் கோபுரத்தைப் பார்ப்பீர்களாஞல், ரஜியா வாசித்த வாக்கியங்களைப் படித்துப் பார்க்கலாம்.

---

10. தைரியம் சிறந்ததோ ? அழகு சிறந்ததோ ?

வெகு காலத்திற்கு முன் இலங்கைத் தீவில் ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் அழகுடையவள். அவள் மகாலக்ஷ்மிபோல அழகாய் இருந்ததனுல் அவளுடைய பெற்றோர் அவளைப் பத்மினி என்று அழைத்து வந்தார்கள்.

நான் உங்களுக்கு அவள் கதையைச் சொல்லுகிறேன். கதையின் முடிவில், நீங்கள், அவளுடைய அழகு சிறந்ததோ அல்லது அவளுடைய தைரியம் சிறந்ததோ என்பதைச் சொல்ல வேண்டும்.

வட இந்தியாவில் மேவார் என்று ஒரு நாடு உண்டு. அந்த நாட்டைப் பீம்ஸிங் என்னும் அரசன் ஆண்டு வந்தான் அவன் பத்மினியின் அழகைக் குறித்துக் கேள்விப்பட்டான்.

அவன் உடனே இலங்கைக்குத் தூதர்களை அனுப்பி அந்தப் பெண்ணின் பெற்ருேருடைய சம்மதத்தைப் பெற்று அவளை மேவாருக்கு அழைத்துவரச் செய்தான்; பின்பு வெகு சிறப்பாக அவளைத் திருமணம் செய்துகொண்டு அவளோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தான்.

அந்தக் காலத்தில் டெல்ஹியில் அலாவுதீன் அரசனு யிருந்தான். அவன் வட இந்தியா முழுவதையும் தன் அதிகாரத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானித்தான். அவன் பெரிய சேனையோடு சென்று பல தேசங்களை ஜயித்து, அவற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். பின்பு அவன் மேவார் நாட்டையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டு மென்று நினைத்தான்.

அலாவுதீன் மேவார் நாட்டு அரசனுகிய பீமஸிங்கினுடைய தைரியத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பொழுது சிறிது பயந்தான்; ஆனல் பத்மினியின் அழகைக் குறித்துக் கேள்விப்பட்ட பொழுது எப்படியாவது அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ளவேண்டு மென்று தீர்மானித்தான்.

மேவார் நாட்டின் தலைநகரம் சித்தூர் என்பது. அலாவுதீன் பெரிய சேனையோடு சென்று

சித்தூர்க் கோட்டையை வளைத்துக்கொண்டான். பீம்ஸிங்கும் அவனுடைய வீரர்களும் தங்களால் ஆனமட்டும் கோட்டையைக் காப்பாற்ற முயன்றார்கள்; பலமுறை கோட்டையிலிருந்து வெளியே சென்று மிகவும் தைரியத்தோடு யுத்தம் செய்தார்கள். ஆனால், அவர்கள் அலாவுதீனுடைய பெரிய சேனைக்கு எதிரே நிற்க முடியவில்லை. முடிவில் பீம்ஸிங் அலாவுதீனுடன் சமாதானம் செய்துகொள்ள இணங்கினான். அலாவுதீன் அதற்கு இணங்கவில்லை; பீம்ஸிங் பத்மினியைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பதா யிருந்தால், தான் சண்டை செய்வதில்லை என்று சொல்லியனுப்பினான். அதைக் கேட்டவுடனே இராஜபுத்திரர்கள் மிகவும் கோபம் கொண்டார்கள். அவர்கள் இறக்கும் வரையில் போர் செய்யத் தீர்மானித்தார்கள்.

அதை அறிந்த அலாவுதீன் தனக்குப் பத்மினியை ஒரு முறை காட்டுவதா யிருந்தால், தான் உடனே சித்தூரை விட்டுப் போய்விடுவெதாகச் சொன்னான். அதை அறிந்த பீம்ஸிங் மிகவும் கோபம் கொண்டான்; எனினும், தன்னுடைய வீரர்களில் அநேகர் மாண்டுபோனபடியால் அலாவுதீனுடைய விருப்பத்தை எப்படி நிறைவேற்றலாம் என்பதைப் பற்றிப் பத்மினி

யோசித்தாள். முடிவில் அலாவுதீன் சில வீரர்களோடு மட்டும் கோட்டைக்குள் வந்து நிலைக் கண்ணாடியில் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்துவிட்டுப் போவதாயின், அதற்கு ஒரு தடையும் இல்லை என்று அவள் அலாவுதீனுக்குச் செய்தி அனுப்பினாள்.

அலாவுதீன் அதற்குச் சம்மதித்தான். பத்மினியின் அழகைக் கண்ணாடியில் பார்ப்பதற்குக் குறித்த நாளும் வந்தது. அலாவுதீன் சில வீரர்களோடு கோட்டைக்குள் சென்று அங்கே ஓர் இடத்தில் வைத்திருந்த நிலைக்கண்ணாடியில் பத்மினியின் பேரழகைக் கண்டான். பின்பு பீம்ஸிங் அலாவுதீனை அழைத்துக்கொண்டு கோட்டைக்கு வெளியே சென்றான். அவன் அலாவுதீனோடு பேசிக்கொண்டே மலையடி வாரத்தை அணுகினான். அப்பொழுது வெளியிலே மறைந்து இருந்த அலாவுதீனுடைய வீரர்கள் பீம்ஸிங்கின்மேல் விழுந்து அவனைப் பிடித்துத் தங்கள் பாளயத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

பீம்ஸிங் அலாவுதீனிடம் கைதியான செய்தி சித்தூருக்கு எட்டிற்று. பத்மினி அதைக் கேட்டாள் ; எப்படியாவது அலாவுதீனை ஏமாற்றித் தன் கணவனைக் காப்பாற்ற வேண்டும் என்று

அழகும் வீரமும் மிக்க பத்மினியை அலாவுதீன்
கண்ணாடியில் காணுதல்.

தீர்மானித்தாள். அவளுடைய மாமனாகிய கோராவும் மாமன் மகனாகிய படுலும் அவளைப் பார்க்கச் சித்தூருக்கு வந்திருந்தார்கள். அவள் அவர்களோடு என்ன என்ன செய்யவேண்டும் என்பதை யெல்லாம் யோசித்துக் கொண்டாள்; பின்பு, அலாவுதீன் முற்றுகையை நிறுத்தினால், தான் அவனுக்கு மனைவியாகிறதாகச் செய்தி அனுப்பினாள்; தனது பெருமைக்கும் அலாவுதீனது பெருமைக்கும் ஏற்றபடி, தான் தன் தோழிப் பெண்களோடு பல்லக்குகளில் ஏறி வருவதாகவும் சொல்லி அனுப்பினாள்.

அதைக் கேட்டதும் அலாவுதீன் சண்டையை நிறுத்தினான். மறுநாள் சித்தூரில் மிகவும் தைரியமுள்ள 700 வீரர்கள் இராஜபுத்திரப் பெண்களைப் போல வேஷம் போட்டுக்கொண்டு 700 மூடு பல்லக்குகளில் ஏறிப் பிரயாணம் ஆனார்கள். ஒவ்வொரு பல்லக்கையும் ஆறு வீரர்கள் பல்லக்குத் தூக்கும் ஆட்களைப்போல வேஷம் தரித்துச் சுமந்துகொண்டு போனார்கள். இந்த 4900 வீரர்கள் நிறைந்த சேனைக்குப் பத்மினியின் மாமனாகிய கோரா ஒரு பெண்ணைப் போல வேஷம் தரித்துத் தலைவனாகச் சென்றான்.

மகம்மதியர்கள் சிறிதும் சந்தேகப்படவே யில்லை. அலாவுதீன் பத்மினியை வர

வேற்க வெகு ஆசையோடு தன் கூடாரத்தின் வெளியே காத்திருந்தான். அப்போது பத்மினி தன் மூடு பல்லக்கில் இருந்தபடியே, "மிகவும் தைரியமுள்ள சுல்தானே! பத்மினியாகிய நான் இதோ உன்னிடம் வந்துவிட்டேன். ஆனால் நான் இனி ஒருபோதும் என் கணவரைப் பார்க்க முடியாது. ஆகையால், நான் கடைசியாக அவரை ஒரு முறை பார்த்துவிட்டு வரும்படி நீ எனக்கு உத்தரவு தரவேண்டும்" என்று கூறினாள்.

அலாவுதீன் அதற்குச் சம்மதித்தான்; அவளுடைய பல்லக்கைப் பீம்ஸிங் இருந்த கூடாரத்திற்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். அதற்கு முந்தின இரவில் இரண்டு இராஜ புத்திர வீரர்கள் மகம்மதியரைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு வெகு வேகமாக ஓடும் இரண்டு குதிரைகளோடு பீம்ஸிங்கின் கூடாரத்திற்குப் பக்கத்தில் காத்திருந்தார்கள்.

பத்மினி தன் கணவன் இருந்த கூடாரத்திற்குச் சென்று பல்லக்கிலிருந்து கீழே இறங்கினாள்; அங்கே தனக்காகக் காத்துக்கொண்டிருந்த சில வீரர்களோடு கூடாரத்திற்குள் புகுந்தாள்; தான் கொண்டுவந்திருந்த வாளையும் எஃகுச் சட்டையையும் கேடகத்தையும் தன் கணவ

னிடம் கொடுத்தாள். பீம்ஸிங் விரைவில் போர்க் கோலம் அணிந்து கொண்டான். உடனே அவள் தன் கணவனை அழைத்துக்கொண்டு வெகு தந்திரமாக வெளியே போனாள். அங்கே ஆயத்தமா யிருந்த இரண்டு குதிரைகளில் இரு வரும் ஏறிக்கொண்டு கண்ணை மூடித் திறக்கும் நேரத்திற்குள் அங்கிருந்து காற்றாய்ப் பறந்து மறைந்து போய்விட்டனர். காவலாளிகள் அவர் கள் இருவரையும் காணமல் கூக்குரலிட்டார்கள். எங்கும் பெருங் குழப்பமாய்விட்டது.

இதற்குள் இராஜபுத்திர வீரர்கள் பல்லக்கு களிலிருந்து வெளியே குதித்து மகம்மதியர் களை எதிர்த்தார்கள். இப்படிப் பாளையம் எங்கும் பெருங் குழப்பமாய் இருந்ததனல், பீம்ஸிங்கும் பத்மினியும் க்ஷேமமாகச் சித்தூர்க் கோட் டையை அடைந்தார்கள். இராஜபுத்திரர்கள் வெகு கோபத்தோடு போர்செய்து அலாவுதீனு டைய சேனையை நாலாப் பக்கங்களிலும் சிதறி ஓடச் செய்தார்கள். இதனல் அலாவுதீன் தன் முற்றுகையை விட்டுவிட வேண்டியதாய் இருந் தது. அவன் தன் சேனையோடு சித்தூரைவிட் டுப் போய்விட்டான்.

11. உயிர் கொடுத்து மகனைக் காத்த பாபர்

பாபர் இந்தியாவிற்கு வடமேற்கில் பர்கானு என்னும் நாட்டுக்கு அரசனாக இருந்தான். அவன் சிறுவனா யிருந்தபடியால், அவனைக் காட்டிலும் பலமுடைய அவன் தாயாதிகள் அவனிடம் இருந்து நாட்டைப் பிடுங்கிக் கொண்டு அவனை ஓட்டி விட்டார்கள். ஆனால் பாபர் சிறிதும் பயப்படவே இல்லை. அவன் வெகு சீக்கிரம் ஒரு சிறு படையோடு காபூலை

பாபர்

எதிர்த்து அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். பின்பு அவன் ஒரு பெரிய சைனியத்தைச் சேர்த்துக்கொண்டு இந்தியாவிற்குள் புகுந்தான். அவன் டெல்ஹியில் ஆண்ட அரசனை ஜயித்துத் தானே டெல்ஹிக்கு அரசனானன்.

பாபர் நன்ருய்ப் படித்தவன் ; ஜனங்களிடத்தில் அன்புடையவன். அவன் மகா பலசாலி.

அவனுக்கு ஹுமாயூன் என்று ஒரு மகன் இருந்தான். பாபர் ஹுமாயூனை மிகவும் நேசித்தான்.

ஒரு சமயம் ஹுமாயூன் வியாதியாய்ப் படுத்தான். பாபர் தன் மகனுக்கு வைத்தியம் செய்யப் பல வைத்தியர்களை வரவழைத்தான். வைத்தியர்கள் வந்து பற்பல முறையில் வைத்தியம் செய்தார்கள்; என்றாலும், ஹுமாயூன் சுகமடையவில்லை. நாளுக்கு நாள் அவனுடைய வியாதி அதிகரித்துக் கொண்டே வந்தது. அவன் எழுந்திருக்க முடியாமல் படுத்த படுக்கையிலேயே இருந்தான். பாபர் இரவும் பகலும் அவன் சமீபத்திலேயே இருந்து அவனுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் தானே செய்து வந்தான்.

ஹுமாயூன்

இப்படி இருந்த பொழுது, ஒரு நாள் பாபருடைய குரு அவனைப் பார்க்க வந்தார். பாபர் அவருடைய அடிகளில் விழுந்து 'கோ' என்று அழுதான். அப்பொழுது குரு அவனைத் தூக்கி எடுத்து, "நீ ஏன் அழுகிறாய்? நீ உயிருக்கு

உயிராய் நினைத்துக் காப்பாற்றுகிற பொருளைக் கடவுளுக்குக் கொடுப்பதாக நேர்ந்துகொள். அப்படிச் செய்தால் உன் மகன் பிழைப்பான்," என்றார்.

அதைக் கேட்ட பாபர், "ஐயா! கோஹினூர் என்ற வைரம் என்னிடம் இருக்கிறது. ஆனால் அதைக் காட்டிலும் எனக்கு அருமையானது என் உயிரேயாம். மகன் குணம் அடைய என் உயிரையே கொடுக்கிறேன்," என்றான். உடனே பாபர் முழங்காற்படியிட்டு, "ஓ அல்லா! என் மகன் பிழைக்கும்படி நான் என் அருமையான உயிரை உமக்குத் தருகிறேன். என் உயிரை எடுத்துக் கொள்ளும்; என் மகனைக் குணமாக்கும்," என்று பிரார்த்தித்தான்.

அது முதல் ஹுமாயூன் நாளுக்கு நாள் குணமடைந்து வரலானான். ஆனால் பாபர், நோய்வாய்ப்பட்டு நாளுக்கு நாள் மெலிவடைந்து எழுந்திருக்க முடியாமல் படுத்த படுக்கையிலேயே கிடந்தான். ஹுமாயூன் முடிவில் நல்ல சுகம் அடைந்தான். சில நாட்களுக்குள் பாபர் உயிர் துறந்தான்.

பாபர் காலத்திலிருந்து ஒரு புதிய இராஜ வம்சத்தரசர்கள் டெல்ஹியை ஆளத் தொடங்கினார்கள். அந்த வம்சத்து அரசர்களுக்கு முக

"என் மகன் பிழைக்கும்படி நான்
என் அருமையான உயிரை உமக்குத் தருகிறேன்," என்று
பாபர் பிரார்த்தித்தான்.

லாயர் என்பது பெயர். பாபரே அந்த வம்சத்து அரசர்களில் முதல்வன். முகலாயர்கள் வீரம் மிக்கவர்கள்.

---

12. மஹா அக்பர்

பாபர் இறந்தவுடனே ஹுமாயூன் அரசனானான். ஆனால் அவன் டெல்ஹியில் வெகு காலம் அரசனாய் இருக்கவில்லை. ஏனென்றால் பகைவர்கள் அவனை டெல்ஹியிலிருந்து ஓட்டி விட்டார்கள்.

ஹுமாயூன் பகைவர்களுக்குப் பயந்து ஓடும்போது அமர்க்கோட் என்னும் இடத்திற்கு வந்தான். அவன் அங்கே சில நாட்கள் மறைந்து இருந்தான். அப்பொழுது அவனுடைய மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டவுடனே ஹுமாயூன் மிகவும் சந்தோஷம் அடைந்தான். அவன் தன் குழந்தை பிறந்த நாளைக் கொண்டாடத் தீர்மானித்தான். அன்று, அங்கே அவனோடு இருந்தவர்கள் ஆடல் பாடல்களில் பொழுது போக்கினார்கள்.

ஆனால் ஹுமாயூன் தன் குழந்தை பிறந்த நாளைக் கொண்டாட வந்த சிநேகிதர்களுக்குக் கொடுக்கத் தன்னிடம் ஒன்றும் இல்லையே

என்று துக்கப்பட்டான். அப்பொழுது அவனுக்கு ஒரு பொருள் ஞாபகத்திற்கு வந்தது. அவனிடம் ஒரு சிமிழில் மிகவும் வாசனை பொருந்தின கஸ்தூரி இருந்தது. அவன் அதை எல்லோருக்கும் கொடுத்தான். உடனே அதன் வாசனை எங்கும் பரவினது. அதை அறிந்த ஹுமாயூன் புன்சிரிப்போடு, அங்கிருந்தவர்களைப் பார்த்து, "என் மகன் பெரியவன் ஆன பிறகு, இந்தக் கஸ்தூரியைப் போலவே வாசனையாய் இருப்பான். அவன் புகழ் எங்கும் பரவும்," என்றான்.

அக்பர்

ஹுமாயூன் தன் குழந்தைக்கு அக்பர் என்று பெயர் இட்டான். பின்பு அவன் அமர்க்கோட்டை விட்டுப் புறப்பட்டுப் பல நாடுகளில் அலைந்து திரிந்தான்; மறுபடியும் ஒரு பெரிய சேனையோடு திரும்பி வந்து டெல்ஹியில் ஆண்டுகொண்டிருந்த அரசனை எதிர்த்தான். டெல்ஹி அரசன் போரில் இறந்தான். அதன் பின்பு

அக்பர் ஹெமுவைக் கொல்ல மறுத்தல்.

ஹுமாயூன் சிறிது காலம் டெல்ஹியில் அரசாண்டான்.

ஹுமாயூன் இறந்தபோது அக்பர் பதின்மூன்று வயதுடைய சிறுவராய் இருந்தார். என்றாலும், அவர் மகா தைரியசாலி. ஹுமாயூன் இறந்த செய்தியைக் கேட்ட ஹேமூ என்ற அரசன் டெல்ஹியை அக்பரிடமிருந்து கைப்பற்ற வந்தான். அப்பொழுது அக்பருடைய உறவினனான **பயிராம்கான்** ஒரு சிறு படையோடு சென்று ஹெமூவை எதிர்த்தான். அந்த யுத்தத்தில் ஹெமூ தோல்வியடைந்தான். பயிராம்கான் ஹெமூவை விலங்கிட்டு அக்பரிடம் கொண்டு வந்தான். அவன் ஹெமூவைக் கொல்லும்படி அக்பரிடம் சொன்னான்.

அதைக் கேட்ட அக்பர் "மாமா! இறந்த மனிதனையா கொல்லச் சொல்லுகிறீர்? இவன் இறந்தவனுக்குச் சமானந்தானே. நான் என் கையால் இவனைக் கொல்லமாட்டேன்," என்றான். பிள்ளைகளே, அக்பருடைய மேலான குணத்தைப் பார்த்தீர்களா? ஆனால், அக்பருடைய வார்த்தைகள் பயிராம்கானுக்கு அவ்வளவு இஷ்டமாய் இருக்கவில்லை. அவன் தன் வாளால் ஹெமூவைக் கொன்று விட்டான்.

அதன் பிறகு அக்பர் அரசரானார். அவர் ஹுமாயூன் கூறினபடியே மிகவும் புகழ்

அடைந்தார். அக்பரைப் போன்ற சிறந்த மகம்மதிய அரசர் அவருக்கு முன்னும் பின்னும் இருந்ததில்லை.

---

13. சிவாஜி

வெகு காலத்திற்கு முன் பூனுவில் ஷாஜி என்னும் பெயர் கொண்ட யுத்தவீரன் ஒருவன் இருந்தான். அவன் பீஜப்பூர் அரசனிடம் தளகர்த்தனுய் இருந்தான். ஒருநாள் அவன் பீஜப்பூர் அரசனுக்காக ஓர் இடத்தில் யுத்தம் செய்யப் போயிருந்தான். அவன் யுத்தம் செய்துவிட்டுப் பீஜப்பூருக்குத் திரும்பிப் போகப் புறப்பட்டான்.

சிவாஜி

வழியில் அவன் தன் மகன் சிவாஜியைக் குறித்து நினைத்துக்கொண்டே போனுன். சிவாஜி பூனுவில் வளர்ந்து வந்தான். ஷாஜி சிவாஜியைக் குறித்துப் பல

கதைகள் கேள்விப்பட்டான். சிவாஜி சிறுவனாய் இருந்தும் வாள் வீசுவதிலும், குதிரை ஏறிச் சவாரி செய்வதிலும், போர் செய்வதிலும் வெகு கெட்டிக்காரனானான். ஷாஜிக்கு அந்தச் செய்தி மிகவும் சந்தோஷமாய் இருந்தது.

ஷாஜி பீஜப்பூருக்குச் சென்றவுடனே பீஜப்பூர் அரசனைக் கண்டு வணங்கினான். அப்பொழுது பீஜப்பூர் அரசன், "ஷாஜி, நான் உன் மகனைக் குறித்துப் பல கதைகள் கேள்விப்படுகிறேன். சிவாஜி மாவலிச் சாதியாரை ஒரு சேனையாகச் சேர்த்திருக்கிறானும். அவன் அந்தப் படையோடு தாரணா கோட்டையைப் பிடித்து விட்டானும். இன்னும் வேறு பல கோட்டைகளையும் பிடிக்கப் போகிறான் என்று கேள்விப்பட்டேன். இதுவரையில் நான் உனக்காக உன் மகனைத் தண்டியாமல் இருந்தேன். இனி அவன் வெகு சீக்கிரம் வந்து என்னிடம் மன்னிப்புக் கேளாவிடின், நான் உன்னைச் சிறைச்சாலையில் அடைப்பேன்," என்றான்.

அதற்கு ஷாஜி, "மஹாராஜரே, நான் வெகு விரைவில் என் மகனை இங்கே வரச் செய்கிறேன். அவன் இங்கே வந்ததும் தங்களிடம் மன்னிப்புக் கேட்பான்," என்று கூறினான். அதன் பின்பு ஷாஜி ஒரு சேவகனை அழைத்து அவ

னிடம் ஒரு கடிதம் கொடுத்தான்; அதைச் சிவாஜி யிடம் கொடுக்கச் சொன்னான்.

ஷாஜியினிடத்திலிருந்து கடிதம் வாங்கிக் கொண்டு போன சேவகன் சிவாஜியினிடம் போய்ச் சேர வெகு நாட்களாகி விட்டன. அதற்குள் பீஜப்பூர் அரசன் ஷாஜியை மிகவும் இருட்டான ஓர் அறையில் அடைத்துவிட்டான். சிறையில் இருந்த ஷாஜி, தன் மகன் வருவான்; பீஜபூர் மன்னனிடம் மன்னிப்புக் கேட்பான்; தான் முன்போலத் தளகர்த்தனாய் இருக்கலாம் என்று ஒவ்வொரு நாளும் நம்பியிருந்தான். நாட்கள் போய் மாதங்கள் ஆயின. ஆனாலும் சிவாஜி வரவே இல்லை. ஷாஜி மிகவும் துக்கமடைந்தான்; முடிவில் சிவாஜி ஒரு நாளும் வரமாட்டான் என்றே நினைத்துவிட்டான்.

இப்படி இருக்கையில், சிவாஜி என்ன செய்தான் என்று பார்ப்போம்: ஷாஜி கொடுத்தனுப்பின கடிதத்தைக் கண்ட சிவாஜி மிகவும் துக்கமடைந்தான். அவன் தன் தந்தையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்தான்; தான் பீஜப்பூர் அரசனிடம் போனால், அந்த அரசன் தன்னை மன்னிக்கமாட்டான் என்று நினைத்தான். முடிவில் அவன் டெல்ஹி

அரசனிடம் உதவி பெறவேண்டும் என்று தீர் மானித்தான்.

அக்காலத்தில் டெல்ஹியில் ஆண்ட அர சன் பெயர் ஷாஜஹான். அவன் அக்பருடைய பேரன். ஷாஜஹானுக்கு மிகவும் அழகான மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர்

ஷாஜஹான்

மும்தாஜ் மஹால்

மும்தாஜ் மஹால். ஷாஜஹான் மிகவும் அழகான ஒரு சிங்காசனம் செய்தான். அது மயில்களின் மேல் அமைந்திருந்தது. நீங்கள் அதைப் போன்ற சிங்காசனத்தைப் பார்த்தே இருக்கமாட் டீர்கள். அது மிகவும் அழகானது.

சிவாஜி ஷாஜஹானிடம் சென்று பீஜப்பூர் மன்னன் தன் தகப்பனுருக்குச் செய்த தீமையைச்

சொன்னான். அப்பொழுது ஷாஜஹான் சிவாஜியோடு 5000 குதிரை வீரர்களை அனுப்பினான். சிவாஜி அந்த வீரர்களோடு பீஜப்பூருக்குப் போய்ச் சிறைச்சாலையில் அடைப்பட்டிருந்த தன் தகப்பனை விடுவித்தான். அப்பொழுது சிவாஜியும் ஷாஜியும் அடைந்த சந்தோஷத்தைச் சொல்ல முடியுமா? ஷாஜி பல வீரர்கள் சூழத் தன் மகனோடு பூனாவைச் சேர்ந்தான்.

தன் தகப்பனை விடுவித்த பின் சிவாஜி வெகு விரைவில் மிக்க பலசாலியானான். அவனைக் கண்டு டெல்ஹி அரசனும் பயப்பட ஆரம்பித்தான். முடிவில் அவன் மகாராஷ்டிர இராஜ்யத்தை ஏற்படுத்தி அதற்கு அரசனானான்.

---

14. டெல்ஹியை ஆண்ட பக்கிரி அரசன்

ஷாஜஹானுக்குப் பின் டெல்ஹியை ஆண்ட மன்னன் ஔரங்கசீப். நான் உங்களுக்கு அந்த அரசனைக் குறித்துச் சில கதைகள் சொல்லுகிறேன். அந்தக் கதைகளின் மூலமாய் அவன் எப்படிப்பட்டவன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

யமுனை நதிக்குச் சமீபத்தில் ஷாலிமார் என்னும் இடம் உண்டு. அங்கே ஷாஜஹான் தன் பரிவாரங்களோடு பாளயம் இறங்கி யிருந்தான்.

சிவாஜி நெடுநாள் சிறைப்பட்டிருந்த தன் தந்தையைச்
சிறை மீட்டல்.

அப்பொழுது மும்தாஜ் மஹாலும் பிள்ளைகளும் அவனோடு அங்கே இருந்தார்கள்.

ஔரங்கசீப்

ஷாஜஹான் அங்கிருந்த போது ஒருநாள் ஒரு பெரிய யானைச் சண்டை நடந்தது. சுதாகர் என்ற யானையும் சுரத் சுந்தர் என்ற யானையும் ஒன்றை ஒன்று எதிர்த்து வெகு கோபமாகப் போராடிக்கொண் டிருந்தன. அந்த வேடிக்கையை ஷாஜஹானும் அவனது குடும்பத்தாரும் பார்த்துக்கொண் டிருந்தனர். அங்கே அந்த வேடிக்கையைப் பார்க்க ஜனங்கள் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள்.

அப்பொழுது ஔரங்கசீப் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு அங்கே வந்தான். அவன் சிறிதும் பயம் இல்லாமல் சுதாகர் என்ற யானையின் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். சுரத்சுந்தர் என்ற யானைக்குத் தோற்றுப்போன சுதாகர், திடீரென்று ஔரங்கசீப் நின்றுகொண்டிருந்த பக்கமாகத் திரும்பினது. அப்பொழுது அஃது ஔரங்கசீப்பைக்

கண்டது. அது சுரத்சுந்தர் மேல் இருந்த கோபத்தை ஔரங்கசீப்பினிடம் காட்ட நினைத்து அவனை எதிர்த்தது.

ஆனால் ஔரங்கசீப் சிறிதும் பயம் இல்லாமல் தான் நின்ற இடத்திலேயே நின்றான். அவன் வெகு தைரியமாகத் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மேல் எறிந்தான். ஈட்டியானது பட்ட உடனே சுதாகருக்குக் கோபம் அதிகரித்தது. அது தன் துதிக்கையினால் ஔரங்கசீப் ஏறி இருந்த குதிரையை இழுத்துக் கீழே தள்ளிற்று. குதிரையின் மேலிருந்த ஔரங்கசீப் கீழே விழுந்தான். ஆனால் ஒரு நொடிக்குள் அவன் எழுந்து நின்று தன் வாளை உருவிக் கொண்டு அந்த யானையை எதிர்த்தான். அவன் வெகு நேரம் யானையின் கையில் அகப்படாமல் அதனோடு போராடினான்.

முடிவில், அவன் யானையின் கைக்குள் அகப்பட்டுவிடுவான் போல இருந்தான். அப்பொழுது அவனுடைய தமையனான ஷூஜா அங்கே வந்து அவனை யானையிடமிருந்து காப்பாற்றினான். ஷாஜஹானும் மற்றவர்களும் ஔரங்கசீப்பின் தைரியத்தைக் கண்டு மிகவும் அதிசயித்தார்கள்; அவனைத் தைரியசாலி என்று கொண்டாடினார்கள்.

ஒளரங்கசீப் 'கோரான்' என்னும் புத்தகம் முழுவதையும் மனப்பாடம் செய்திருந்தான். கொரான் மகம்மதியர்களுடைய வேதம். அவன் அந்த வேதத்திற் சொல்லியிருந்தபடியே நடக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். அவன் மாமிசமே உண்ணுமல் இருந்தான்; மதுபானங்களை வெறுத்தான்; தன் இராஜ்யத்திலிருந்து வந்த வருமானத்தைக் குடிகளுக்கே செலவிட வேண்டுமென்றும் அதைத் தன் நன்மைக்காகச் செலவழிக்கக் கூடாதென்றும் நினைத்திருந்தான். அதனுல், அவன் தொப்பிகளைத் தைத்து விற்று வந்த பணத்திஞல் உண்டு வந்தான். அவன் சிங்காசனத்தில் உட்கார்ந்த வேளைகளில் மட்டுமே இராஜ உடை தரித்தான். மற்ற வேளைகளில் அவன் சாதாரண உடையையே தரித்துவந்தான். அவன் எப்பொழுதும் ஒரு புலித்தோலைக் கீழே விரித்துப் படுத்துத் தூங்கிவந்தான். எவ்வளவு அவசரமான வேலைகள் இருந்தாலும் குறித்த வேளைகளில் ஜபம் செய்தலை அவன் மறந்ததேயில்லை. இதனுல்தான் நான் அவனைப் பக்கிரி அரசன் என்று சொன்னேன்.

ஒருநாள் ஒளரங்கசீப் தன் அரண்மனையின் மாடியில் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஜனங்கள் பெருங் கூட்டமாக அழுது

கொண்டு போனார்கள். அதைக் கண்ட ஔரங்கசீப் இறந்து போனவர் யார் என்பதை விசாரித்தான். அப்பொழுது அவர்கள், "இராஜாதி ராஜரே! சங்கீதம் இறந்து போய்விட்டது; அதைப் புதைக்கப் போகிறோம்," என்றார்கள்.

அதைக் கேட்ட ஔரங்கசீப், "அப்படியா! வெகு சந்தோஷம்! நீங்கள் குழியை மிகவும் ஆழமாகத் தோண்டி, மறுபடியும் மேலே வராதபடி அச்சங்கீதத்தைப் புதையுங்கள்," என்று சொன்னான் இவ்வாறு அவன் கூறியதற்குக் காரணம், சங்கீதத்தின்மீது அவனுக்கு இருந்த வெறுப்பேயாகும்.

ஔரங்கசீப் சங்கீதத்தைப் போலவே இந்து மதத்தையும் வெறுத்தான். அதனால், அவன் இந்துக்களுக்கு மிகவும் துன்பம் செய்து வந்தான். அவனுடைய கொரானில் 'மகம்மதியர் அல்லாதவருக்கு இரக்கம் காட்டக்கூடாது' என்று எழுதப் பட்டிருந்தது போலும்!

ஔரங்கசீபினுடைய காலத்தில் அவனுக்கு ஒரு விரோதி இருந்தான். அந்த விரோதி சிவாஜியேயாம். சிவாஜி ஔரங்கசீபுக்கு ஒரு முள்ளாக இருந்தான். ஔரங்கசீப் சிவாஜியை எவ்விதத்திலேனும் கொல்ல வேண்டுமென்று வழி தேடினான். ஆனால் அது கூடாமற் போயிற்று.

ஔரங்கசீபினுடைய காலத்திற்குப் பிறகு முகலாய இராஜ்யம் சீர்குலைந்து விட்டது. நமது தேசமெங்கும் பல விதமான குழப்பங்களும் கலகங்களும் ஏற்படத் தொடங்கின. அப்பொழுது, ஐரோப்பாக் கண்டத்திலிருந்து வந்து நம்முடைய நாட்டில் வியாபாரம் செய்து வந்த ஐரோப்பியர்கள் நமது நாட்டைக் கவர முயன்றார்கள். இப்படி, எங்கும் குழப்பமும் கலகமுமாய்ச் சமாதானம் இல்லாமல் இருந்த பொழுது, ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் சிறிது சிறிதாகத் தமது அதிகாரத்திற்கு உட்படுத்திக் கொண்டு வந்தார்கள். முடிவில் நமது பரத கண்டம் ஆங்கில அரசாட்சியின் கீழ் வந்தது. நமது தேசம் ஆங்கில அரசாட்சியின் கீழ் வந்த பின் மிக்க க்ஷேமமும் சமாதானமும் பெற்று அநேக நலன்களை அடைந்து வருகின்றது. நீங்கள் இந்த வகுப்பில் நமது தேசத்தின் சில வீரர்களின் கதைகளை வாசித்தீர்கள். நீங்கள் மேல் வகுப்புகளில் நமது தேசத்தின் கதையை இன்னும் அதிக விரிவாகத் தெரிந்து கொள்வீர்கள்.

121211

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.